பக்கங்கள் 16+ 03

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | வைகாசி 03 சனிக்கிழமை 17.05.2025 | அதிர்வு 287

சிதைவடைந்த நிலையில்

## களனி கங்கையில் ஆணின் சடலம்!

(எஸ்.ஜினோதன்)



கொழும்பு மாவட்டம், முல்லேரியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அம்பத்தல 02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# செம்மணியில் 3 அடி ஆழத்தில் மீட்கப்பட்ட மனித எலும்புக்கூடு

## பாரிய புதைகுழியாக இருக்கலாம் என்று அச்சம்
## மழை காரணமாக அகழ்வுப் பணி இடைநிறுத்தம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், அரியாலை, செம்மணி - சித்துப்பாத்தி இந்து மயான பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வில் மூன்றடி ஆழத்தில் ஒரு முழுமையான மனித எலும்புக்கூடு மீட்கப்பட்டுள்ள நிலையில் குறித்த பகுதியில் பாரிய மனிதப் புதைகுழி காணப் படலாம் என்ற சந்தேகம் மேலும் வலுப் பெற்றுள்ளது.

செம்மணி - சித்துப்பாத்தி இந்து 02



## தேசிய மக்கள் சக்திக்குள் பிரச்சினை இல்லையாம்

“ஜே.வி.பியினருக்கும், தேசிய மக்கள் சக்தியினருக்கும் இடையில் எவ்வித பிரச்சினையும் இல்லை. நாம் சிறப்பா கவே இணைந்து பயணித்து 02

# ஐக்கிய மக்கள் சக்திக்கு இளம் தலைமைத்துவம் மிகவும் அத்தியாவசியம்

## சமிந்த விஜேசிறி எம்.பி. வலியுறுத்து

“ஐக்கிய மக்கள் சக்தி அடுத்து ஆட்சி யைக் கைப்பற்றக்கூடிய பலம் மிக்க சக்தி யாக உருவாக வேண்டும். அதற்கு கட்சிக் குள் மறுசீரமைப்புக்கள் மேற் கொள்ளப்பட வேண்டும். ஹர்ஷ டி சில்வா உள்ளிட்ட வர்களுக்குக் கட்சியில் மேலும் உயர்வடை வதற்கான வாய்ப்புக்களை தலைமைத் துவம் வழங்க வேண்டும். ஐக்கிய 02



# நந்திக்கடலில் பிரபாகரனுக்கு வீரவணக்கம்!




முல்லைத்தீவு, நந்திக்கடலில் இன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 16 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் வீரச்சாவடைந்த மே மாதம் 17 ஆம் திகதி அதிகாலைப் பொழுதில் அதே இடத்தில் மக்களால் இன்று நினைவுச்சுடர் ஏற்றப்பட்டு. உணர்வுபூர்வமாக வீரவணக்கம் செலுத்தப்பட்டது என்று சமூக ஊடகங்களில் படங்களுடன் செய்தி வெளியாகியுள்ளது.

## களனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீதியில் அமைந்துள்ள களனி கங்கையில் மிதந்த நிலையில் ஆண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை மாலை சடலமாக மீட்கப்பட்டவர் தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை என்று முல்லேரியா பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமானது அடையாளம் காண முடியாத அளவுக்குச்சிதைவடைந்துள்ளது என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இது தொடர்பில் முல்லேரியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## செம்மணியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மயானத்தில், அபிவிருத்திப் பணிகளுக்காக நல்லூர் பிரதேச சபையால் கடந்த பெப்ரவரி மாத ஆரம்பத்தில் குழிகள் வெட்டப்பட்டபோது, மனித எச்சங்கள் பல மீட்கப்பட்டிருந்தன.

அந்த மனித எச்சங்கள் 1995, 1996 ஆம் ஆண்டுகளில் செம்மணியில் படுகொலை செய்யப்பட்ட தமிழர்களுடையதாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டது.

முறைப்பாட்டின் பிரகாரம் பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி யாழ் நீதிமன்ற நீதிவான் மேற்கொண்ட ஆய்வுப் பணிகளைத் தொடர்ந்து, மனித எச்சங்கள் மீட்கப்பட்ட பகுதியை ஸ்கான் ஆய்வுக்கு உட்படுத்தவும், தொடர்ந்து அகழ்வுப் பணிகளை முன்னெடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்தப் பணிகள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஆரம்பமான நிலையில், நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற இரண்டாம் நாள் அகழ்வின்போதே இந்த மனித எலும்புக் கூட்டுத் தொகுதி மீட்கப்பட்டுள்ளது.

முழுமையான என்புத் தொகுதி, மண்டையோடு என்பவற்றுக்கு மேலதிகமாக கை ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் அகழ்வு செய்யப்படும் பகுதியின் வெவ்வேறு இடங்களில் இருந்து மீட்கப்பட்டதால், அந்த இடம் பாரிய மனிதப் புதைகுழியாக இருக்கலாம் என்ற அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

துறைசார் நிபுணரும் பேராசிரியருமான சோமதேவாவின் தலைமையில் மூன்றாம் நாள் அகழ்வுப் பணிகள் இன்று சனிக்கிழமை முன்னெடுக்கப்பட இருந்த நிலையில் இன்று அதிகாலை முதல் யாழ்ப்பாணத்தில் பெய்து வரும் மழை காரணமாக அகழ்வுப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

## ஐக்கிய மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் சக்திக்கு தற்போது இளம் தலைமைத்துவம் மிகவும் அத்தியாவசியமானது."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"ஐக்கிய மக்கள் சக்தி ஒற்றுமையுடன் முன்னோக்கிப் பயணிக்க வேண்டியுள்ளது. ஒற்றுமையைப் பாதுகாக்க வேண்டியுள்ளது. அதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தி மறுசீரமைக்கப்பட வேண்டும். மக்கள் எதிர்பார்க்கும் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தயாராக வேண்டும்.

அடுத்து ஆட்சியைக் கைப்பற்றக்கூடியவாறு கட்சியின் உள்ளக கட்டமைப்புக்களில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். நாட்டைக் கட்டியெழுப்பக் கூடிய, ஊழல் – மோசடிகளற்ற சிறந்த தலைமைத்துவம் கட்சிக்குள் உருவாகியுள்ளது. ஹர்ஷ டி சில்வா, கபீர் ஹசீம், எரான், முஜிபுர், மரிக்கார், நளின் பண்டார போன்றவர்கள் தூய்மையான அரசியலில் ஈடுபட்டு வருகின்றனர்.

நாட்டைக் கட்டியெழுப்பக் கூடிய உண்மையான திறமையும், பலமும் கொண்டவர்கள். இவர்கள் மேலும் உயரக்கூடியவர்கள். எனவே, அவர்களுக்கான இடத்தை வழங்க வேண்டியது கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களின் கடமையாகும். ஐக்கிய தேசியக் கட்சியின் பலவீனமான தலைமைத்துவத்தால்தான் இன்று நாடும் இந்த நிலையை அடைந்துள்ளது.

நாம் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து தோன்றியவர்கள். எனவே, இனியும் ஐக்கிய தேசியக் கட்சி அல்லது ஐக்கிய மக்கள் சக்தி ஒரிருவருக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டவையாக இருக்கக் கூடாது. எனவே, பலம் மிக்க சிறந்த இளம் தலைமைத்துவம் இனிவரும் அரசியலில் ஐக்கிய மக்கள் சக்திக்குத் தேவையாகவுள்ளது.

இனிவரும் காலங்களில் கட்சிக்கும் நாட்டுக்கும் தேவையான சிறந்த இளம் தலைமைத்துவத்தை முன்னிறுத்த வேண்டும். ஐக்கிய மக்கள் சக்திக்குள் அந்த மாற்றம் நிச்சயம் ஏற்படுத்தப்பட வேண்டும். நாட்டு நலனுக்கு இந்த மாற்றம் அத்தியாவசியமானது." – என்றார்.

## தேசிய மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகின்றோம்."

– இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"கடந்துள்ள 6 மாதங்களுக்குள் தேசிய மக்கள் சக்தி மற்றும் ஜே.வி.பிக்கிடையில் குழப்பம் ஏற்படும் எனப் பலர் கருதினர். அது தொடர்பில் கதைகளைப் பரப்பினார்கள். இன்றளவிலும் சமூகவலைத்தளங்களில் பதிவுகள் தொடர்கின்றன. இந்தப் பதிவுகளை பார்க்கும்போது சிரிப்புதான் வருகின்றது.

எமது குழுவினர் புரிந்துணர்வுடன் சிறப்பாகச் செயற்பட்டு தமது பணிகளை முன்னெடுத்து வருகின்றனர். எனவே, வீண் விமர்சனங்கள் குறித்து நாம் அலட்டிக்கொள்ள வேண்டியதில்லை."

– என்றார்.

# மோட்டார் சைக்கிள் விபத்தில் ஊடகவியலாளர் உயிரிழப்பு!





(ஏ.எச்.ஹஸ்பர்)

திருகோணமலை, ஹபரண வீதியில் கல்வங்கு பிரதேசத்தில் இன்று (17) இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத் தில் மோட்டார் சைக்கிள் சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் கந்தளாய் பகுதியைச் சேர்ந்த ஊடகவியலாளர் பிரியான் மலிந்த என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். இரத்தினபுரியில் இருந்து கந்தளாய் நோக்கி பயணித்த போதே குறித்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

உயிரிழந்த நபர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துகொரலவின் ஊடகச் செயலாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்தவுக்கு கொழும்பு நீதிமன்றத்தால் பிடியாணை!



முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவைக் கைது செய்வதற்கு நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

2021 ஆம் ஆண்டு தரமற்ற உரம் இறக்குமதி செய்யப்பட்ட குற்றச்சாட்டு தொடர்பிலேயே மஹிந்தானந்தவைக் கைது செய்ய நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தால் நேற்று இந்தப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.



# காற்றுடன் கூடிய கனமழையால் தம்பலகாமம் வீடுகளுக்கு பாதிப்பு

(ஏ.எச்.ஹஸ்பர்)

தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியில் இன்று (17) காலை பெய்த கன மழை யுடனான கூடிய காற்றால் வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது என்று வீட்டு உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தம்பலகாமம் பிரதேச பகுதியின் கல்மெடியாவ தெற்கு கிராம சேவகர், வடக்கு மற்றும் பாரதிபுரம் உட்பட பல இடங்களில் உள்ள வீடுகளின் கூரைகள் மற்றும் கட்டடங்களும் பாதிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கின்றனர்.





# மன்னாரில் 20 நிமிடங்கள் தாண்டவமாடிய மினி சூறாவளி

(வாஸ் கூஞ்ஞ)

மன்னாரில் திடீரென ஏற்பட்ட மினி சூறாவளி பொருளாதாரத்தில் நொந்து போய் இருக்கும் பலருக்கு சேதங்களை ஏற்படுத்தி சென்றுள்ளது என்று பாதிப் படைந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

இன்று சனிக்கிழமை (17) காலை சுமார் 5.45 மணியளவில் திடீரென ஏற்பட்ட மினி சூறாவளியானது பலத்த மழையுடன் தாண்டவமாடியதால் மீனவர்கள் உட்பட பலர் பாதிப்படைந் துள்ளனர்.

மன்னாரில் பரவலாக கடற்கரை யோரங்களில் அமைக்கப்பட்டிருந்த மீன் வாடிகள் சேதமாகியுள்ளன. கடலில் நங்கூரமிடப்பட்டிருந்த படகுகள் ஒன் றுடன் ஒன்று மோதி சிறு சேதங்களுக்கு உள்ளாகின. கரையில் இருந்த சிறிய பிளாஸ்ரிக் படகுகள் காற்றால் தூக்கி வீசப்பட்டன.

சுமார் இருபது நிமிடங்கள் தாண்ட வமாடிய இந்த மினி சூறாவளி பல வீடுகளின் கூரைகளை சேதமாக்கியது. வாழ்வாதாரத்துக்காகப் பயிரிட்ட வாழை மரங்கள், பப்பாசி மரங்களையும் சேத மாக்கியுள்ளது.

அந்தந்தப் பகுதிகளில் கடமை புரியும் கிராம அலுவலர்கள் தங்கள் பகுதிகளில் எற்பட்டுள்ள அனர்த்த சேத விவரங்களைத் திரட்டி வருகின்றனர்.



# வவுனியாவில் மினி சூறாவளி

(கி.வசந்தன்)


வவுனியாவில் இன்று (17) காலை வீசிய மினி சூறாவளியால் மரங்கள் முறிந்து விழுந்ததுடன் மக்கள் குடியிருப்புக்கள், வியாபார நிலையங்கள், வாகனங்கள் என பலதும் சேதமடைந்துள்ளன.

மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிப்படைந்துள்ளது. வவுனியாவின் குருமன்காடு, பூந்தோட்டம் உள்ளிட்ட பகுதிகளில் கடும் காற்றுடன் மழையும் பெய்துள்ளது.





# சாவகச்சேரியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி!




இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சாவகச்சேரி தொகுதிக் கிளையின் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கஞ்சி பரிமாறும் நிகழ்வு நேற்று (16) இடம்பெற்றது.











# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நுளம்புகளின் சவால்

இலங்கையில் மாறி வரும் கால நிலை மாற்றங்களால் தற்போது நுளம்புகளால் பரவும் நோய்கள் - குறிப்பாக டெங்கு மற்றும் சிக்குன் குனியா ஆகியவை கணிசமாக அதிகரித்து வருகின்றன. அதே நேரத்தில் குழந்தைகளிடையே இன்ஃப்ளூயன்ஸா காய்ச்சலும் அதிகரித்து வருவதாக சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கொழும்பு லேடி ரிட்ஜ்வே மருத்துவமனையின் ஆலோசகர் குழந்தை மருத்துவரான டாக்டர் தீபால் பெரேரா, அளித்த பேட்டியில், ஏடிஸ் நுளம்புகள் மற்றும் ஈக்கள் மூலம் பரவும் டெங்கு மற்றும் சிக்குன் குனியா பரவல் ஒரு குறிப்பிடத்தக்க பொது சுகாதார சவாலை ஏற்படுத்துகிறது என்று கூறினார்.

நுளம்புகள் பெருகும் இடங்களை அகற்றுவதன் முக்கியத்துவத்தையும், அதிக காய்ச்சல், மூட்டு வலி அல்லது உடல் வலி போன்ற அறிகுறிகள் தோன்றினால் உடனடியாக மருத்துவ உதவியை நாடுவதன் முக்கியத்துவத்தையும் சுகாதார அதிகாரிகள் முன் எச்சரிக்கை நடவடிக்கைகளாக மேற்கொள்ளுமாறு வலியுறுத்துகின்றனர்.

குறிப்பாக குழந்தைகளிடையே இன்ஃப்ளூயன்ஸா பாதிப்புகள் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்து வருவதை டாக்டர் பெரேரா சுட்டிக் காட்டுகின்றார்.

சிறாருக்கு காய்ச்சல், இருமல், வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கு போன்ற அறிகுறிகள் இருந்தால் பெற்றோர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும், இந்த அறிகுறிகள் காணப்பட்டால் மருத்துவரை தாமதியாது அணுக வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்துகின்றார்.

சுகாதாரத்தைப் பேணுதல், நுளம்பு விரட்டிகளைப் பயன்படுத்துதல் மற்றும் நீண்ட கை ஆடைகளை அணிதல் உள்ளிட்ட தடுப்பு நடவடிக்கைகளைப் பின்பற்றுமாறு அதிகாரிகள் பொதுமக்களை வலியுறுத்துகின்றனர்.

அதே சமயன் இந்த நோய்கள் பரவுவதைத் தணிக்க அரசாங்கம் விழிப்புணர்வு பிரசாரங்கள் மற்றும் நோய்க் கிருமி கட்டுப்பாட்டு திட்டங்களைத் தொடங்கியுள்ளது என்றும் கூறப்படுகின்றது.

நமது வாழ்வியலை பாதிக்கும் டெங்கு மற்றும் சிக்கன்குனியா போன்ற நோய்களின் பரவலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கை தனித்து ஒருவரால. - ஒரு தொகுதியினரால் - மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கை அல்ல. அது சமூகத்தின் கூட்டு முயற்சியாக பொறுப்புணர்வோடு முன்னெடுக்கப்பட வேண்டிய விடயம்.

சுகாதார துறையினர் அறிவுறுத்துகின்ற பிரகாரம் ஏடிஸ் நுளம்பு பரவாலுக்கான இடங்களைக் கட்டுப்படுத்தித் தவிர்ப்பதில் முழுச்சமூகமும் ஒன்றிணைந்து பணியாற்றினால் மட்டுமே சமூக வாழ்வியலுக்கு வலி தரும் டெங்கு மற்றும் சிக்கன்குனியா போன்றவற்றை கட்டுப்பாட்டில் கொண்டு வர முடியும்.

சுகாதாரத் துறையினர், சட்டம் - ஒழுங்கு கட்டுப்பாட்டுத் துறையினர், நீதித்துறையினர் ஆகியோர் தங்களுடைய சட்ட அதிகாரங்கள் மூலம் இந்த விடயத்தை நடைமுறைப்படுத்தத் தூண்டினாலும் சமூகம் முழுமையாக அதன் பொறுப்புணர்வைப் புரிந்து கொண்டு இவ்விடயத்தில் காத்திரமாகச் செயல்பட்டால் மாத்திரமே இந்த நோய்களால் ஏற்படும் அச்சுறுத்தலை எதிர்கொண்டு சமாளிக்க முடியும்.



# கொட்டும் கனமழையில் தம்பலகாமத்தில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட தம்பலகாமம் நான்கு வாசல் பிள்ளையார் கோயில் சந்தியில் முள்ளிவாய்க்கால் நினைவு கஞ்சி இன்று (17) காலை கொட்டும் கன மழைக்கு மத்தியிலும் வழங்கப்பட்டது.

இதனை இலங்கை தமிழரசு கட்சியின் தம்பலகாமம் பிரதேச சபைக்கு உறுப்பினர்களாகத் தெரிவாகியவர்கள், வடகிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவினர் ஆகியோர் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர்.

முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தை முன்னிட்டு, கடந்த யுத்தத்தில் உயிரிழந்த மக்களை நினைவு கூரும் நிகழ்வுகள் நீடித்த வலியையும், அரசால் மறுக்கப்படும் நீதிக்கான மக்களின் போராட்டத்தையும் வெளிப்படுத்தும் முக்கியமான வலையொலியாக மாறியுள்ளன.

இதன் போது இறுதி யுத்தத்தின் போது முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களை நினைவு கூர்ந்து ஒரு நிமிட மௌன அஞ்சலியும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், காணாமல் போனோரின் உறவுகள், கிராமப்புற மக்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்டு தங்கள் துயர அனுபவங்களைப் பகிர்ந்தனர்.

இதன் போது கிண்ணியா தம்பலகாமம் பிரதான வீதியில் பயணிப்போரும் முள்ளிவாய்கால் கஞ்சியை பருகினர்.





# மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் சவூதி அரேபிய தூதருடன் சந்திப்பு!



அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன், இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலித் ஹமூத் அல்கஹ்தானியை, நேற்று வெள்ளிக்கிழமை (16) கொழும்பிலுள்ள சவூதி அரேபிய தூதரகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது,

இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவருடன் ஒரு சுமூகமான மற்றும் பயனுள்ள சந்திப்பை மேற்கொண்டதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இதன்போது, பல்வேறுபட்ட சமகால பிரச்சினைகள் குறித்து நாங்கள் விரிவாகக் கலந்துரையாடினோம்.

நமது இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்பு மற்றும் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்தும் ஆராய்ந்தோம். இதேவேளை, தூதரின் அன்பான விருந்தோம்பலையும், இருதரப்பு உறவுகளை வளர்ப்பதற்கான அவரது தொடர்ச்சியான அர்ப்பணிப்பையும் நான் பாராட்டுகிறேன்.- என்று குறிப்பிட்டுள்ளார்.

# முள்ளிவாய்க்கால் மண்ணில் அன்று நிகழ்ந்த அவலம் எதிர்காலத்துக்குப் படிப்பினையாக அமைய வேண்டும்

## ஈ.பி.டி.பி. ஊடகச் செயலாளர் ஸ்ரீகாந் தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

முள்ளிவாய்க்கால் அவலம் எதிர்காலத்துக்கான படிப்பினையாக அமைய வேண்டும் என்று இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் தெரிவித்துள்ள ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடகச் செயலாளர் பன்னீர்செல்வம் ஸ்ரீகாந், உப்பு மாபியாவுக்கும் முடிவு கட்டப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“முள்ளிவாய்க்கால் அவலம் நினைவு கூரப்பட்டு வருகின்றது. 2009 ஆண்டு இதே காலப் பகுதியில் இடம்பெற்ற முள்ளிவாய்கால் அவலம் காரணமாக ஆயிரக்கணக்கான எமது மக்கள் உயிரிழந்திருந்தனர். அவ்வாறு உயிரிழந்தவர்களை நினைவுகூருவதும் அவர்களுக்கான பிரார்த்தனைகளை முன்னெடுப்பதும் யாராலும் விமர்சிக்கப்பட முடியாதது.

அதேபோன்று அந்த பேரவலம் தொடர்பாக அடுத்த சந்ததிக்கும் கடத்தப்பட வேண்டும் என்பதற்காக முள்ளிவாய்க்கால் கஞ்சி பல்வேறு இடங்களிலும் வழங்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறான நினைவேந்தல் நிகழ்வுகள், எமது இனத்தின் எதிர்காலத்துக்கான படிப்பினைகளாக அமைய வேண்டும்.

இவ்வாறான அவலங்கள் எவ்வாறு இடம்பெற்றன? இந்த அவலத்தை தடுப்பதற்கான முயற்சிகள் எவ்வாறு மேற்கொள்ளப்பட்டன? முள்ளிவாய்க்கால் பேரவலத்தை எம்மால் தடுத்து நிறுத்தியிருக்க முடியாதா? போன்ற கேள்விகளுக்கு சுயவிமர்சன அடிப்படையில், பதில்களைக் கண்டறிந்து அவற்றையும் எமது அடுத்த சந்திக்கு கடத்துவதன் மூலம், எதிர்காலத்தில் எமது மக்கள் இந்த மண்ணில் கௌரவமாக வாழ்வதற்கான சூழலை உறுதிப்படுத்த முடியும்.



ஆனால், முள்ளிவாய்க்கால் அவலம் போன்ற நிகழ்வுகள், சில தரப்புக்களினால் தங்களின் குறுகிய அரசியல் நலன்களுக்கும் சுய விளம்பரத்துக்கும் பயன்படுத்தப்படுவது வேதனையான விடயம். இதனை மக்கள் புரிந்துகொண்டு இவ்வாறான நிகழ்வுகளை அறிவு சார்ந்து சிந்தித்து புத்திசாதுர்யமாக கையாள வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

அதேபோன்று, யுத்தம் நிறைவடைந்த சூழலில் ஆனையிறவு உப்பளத்தினை மீளச் செயற்படுத்துவதற்கான முயற்சிகளை அப்போது பாரம்பரிய சிறுகைத்தொழில் முயற்சி அமைச்சராக இருந்த எமது செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா முன்னெடுத்திருந்தார்.

அவரின் முயற்சியால் வடக்கின் வசந்தம் செயற்றிட்டத்தின் ஊடாக 100 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. எனினும், 2015 ஆட்சி மாற்றத்தின் பின்னரே ஆனையிறவில் உப்பு உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டு, உற்பத்தி செய்யப்படுகின்ற உப்பு, மாந்தை போன்ற பிரதேசங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு பதனிடப்பட்டு சந்தைப்படுத்தப்பட்டு வந்தது.

இந்நிலையில், கடந்த சில மாதங்களுக்கு முன்னர், ஆனையிறவில் உற்பத்தி செய்யப்படுகின்ற உப்பை ஆனையிறவிலேயே பதனிடுவதற்கான இயந்திரங்கள் பொருத்தப்பட்டு வேலைகள் கோலாகலமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன. எனினும், புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரத்தில் கோளாறு ஏற்பட்டிருக்கின்றது எனவும், அதுவரையில் ஆனையிறவில் பதனிடல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படாது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, கடந்த சில தினங்களாக ஆனையிறவு உப்பு உற்பத்தியில் ஈடுபடும் பணியாளர்கள், தமக்குத் தொடர்ச்சியாக தொழில் வழங்கப்படுவதில்லை எனவும், அடிப்படை உரிமைகள் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை எனவும் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆகவே, உப்பை பதனிடுவதற்காகப் புதிதாகப் பொருத்தப்பட்ட பதனிடும் இயந்திரத்தில் கோளாறு ஏற்பட்டமை, வாரம் முழுவதும் உப்பு உற்பத்தியில் ஈடுவதற்கான சூழல் இருக்கின்ற போதிலும், பணியாளர்களின் வேலை நாட்கள் மட்டுப்படுத்தல் போன்ற செயற்பாடுகளின் பின்னணியில் உப்பு மாபியா செயற்படுகின்றதோ என்ற பாரிய சந்தேகம் உருவிகியுள்ள நிலையில், அவை தொடர்பாக உரிய விசாரணை முன்னெடுக்கப்பட்டு பணியாளர்களின் நியாயமான கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்பதை வலியுறுத்த விரும்புகின்றோம்.” – என்றார்.

# மோட்டார் சைக்கிள் மோதி 91 வயது மூதாட்டி மரணம்!

வீதி விபத்தில் 91 வயதுடைய மூதாட்டி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கம்பஹா – கந்தானை பிரதேசத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியில் பயணித்த ஓட்டோ ஒன்றைக் கடந்து முன்னோக்கிச் செல்ல முயன்றபோது எதிர்த்திசையில் பயணித்த மற்றுமொரு மோட்டார் சைக்கிளுடன் மோதி பின்னர் வீதியில் பயணித்த மூதாட்டி மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.



விபத்தில் படுகாயமடைந்த மூதாட்டி ராகமை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

கந்தானை பிரதேசத்தைச் சேர்ந்த மூதாட்டியே உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து மோட்டார் சைக்கிளின் செலுத்துனர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கந்தானை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வாக்கு வேட்டைக்காகவே கனடாவில் தமிழின அழிப்பு நினைவகம் அமைப்பு

## வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் குற்றச்சாட்டு

"வாக்கு வேட்டைக்காகவே கனடா, பிரம்டன் மேயரால் தமிழின அழிப்பு நினைவகம் அமைக்கப்பட்டுள்ளது. தேர்தல் காலத்தில் வழங்கிய உறுதி மொழியை அவர் நிறைவேற்றியுள்ளார்."

– இவ்வாறு இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"பிரம்டன் பகுதியில் தமிழின அழிப்பு தொடர்பான நினைவகத்தை அமைப்பதற்குரிய நடவடிக்கை 2021 ஆம் ஆண்டில் ஆரம்பமாகியுள்ளது. இதற்கு முன்னாள் வெளிவிவகார அமைச்சர்களாலும் எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது. கனடா வெளிவிவகார அமைச்சருக்கும் இது தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. எமது ஆட்சியிலும் இது விடயத்தில் மீண்டும் தலையிட்டோம். தடுத்து



நிறுத்துவதற்கு முயற்சித்தோம்.

எனினும், அந்நாட்டு சட்டத்தின் பிரகாரமே அதனை முன்னெடுப்பதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது. அதேபோல் தமிழின அழிப்பு வாரத்துக்கு எதிராக தடை உத்தரவு பெறுவதற்குக் கனடாவிலுள்ள அமைப்பொன்று நீதிமன்றத்தை நாடியிருந்தாலும் அந்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

எனவே, தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்த பிறகுதான் இந்த நினைவகம் அமைக்கப்பட்டது எனக் கூறப்படுவது பிழை. 2021 ஆம் ஆண்டில் இருந்தே நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

பிரம்டன் மேயர் வாக்கு வேட்டைக்காகவே இந்தச் செயலைச் செய்துள்ளார். அப்பகுதியில் அதிகளவான இலங்கைத் தமிழர்கள் வாழ்கின்றனர். தேர்தல் கால வாக்குறுதியை அவர் நிறைவேற்றியுள்ளார்.

புலிகள் அமைப்பு கனடாவில் தடை செய்யப்பட்ட அமைப்பாகும். எனவே, வேறொரு அமைப்பின் பெயரில்தான் நடவடிக்கை இடம்பெற்றுள்ளது. இதற்கு எதிராக எடுக்க வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் நாம் எடுத்தோம். கனடாவின் புதிய அரசிடமும் தூதுவர் ஊடாக அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது." – என்றார்.

# இலங்கைகான பாகிஸ்தான் தூதருடன் நாமல் ராஜபக்ஷ எம்.பி. சந்திப்பு

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரான நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ இலங்கைகான பாகிஸ்தான் தூதரைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

நாமல் ராஜபக்ஷ நேற்றுக் காலை கொழும்பில் உள்ள பாகிஸ்தான் தூதரகத்துக்குத் திடீர் விஜயமொன்றை மேற்கொண்டார். அதன்போது பாகிஸ்தானின் தூதர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் பஹீம் உல் அஜீஸ்டன் கலந்துரையாடியுள்ளார்.

இதன் போது பிராந்திய சூழ்நிலை மற்றும் இரு சகோதர நாடுகளுக்கு இடையிலான வலுவான இருதரப்பு உறவுகள் குறித்தும் பேசப்பட்டது என்று இலங்கைக்கான பாகிஸ்தான் தூதரகம் தகவல் வெளியிட்டுள்ளது.



# அநுர அரசு ஏழு மாதங்களிலேயே உப்பின் விலையை உயர்த்தியது!

## விமல் வீரவன்ஸ குற்றச்சாட்டு

அநுர அரசு பதவியேற்று ஏழு மாதங்களிலேயே உப்பின் விலை 400 ரூபாவாக உயர்வடைந்துள்ளது என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

ஒரு பக்கெட் உப்பின் விலை 60 ரூபாவாக வருவதற்கு 76 வருடங்கள் சென்றன. ஏழு மாதங்களில் அது 400 ரூபாவாக உயர்வடைந்துள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் எந்தவொரு அரசும் உப்பு, அரிசி போன்றவற்றில் இந்தளவு தரகுப் பணம் சம்பாதித்தது கிடையாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய அரசின் எந்தவொரு இயலாமையையும் மூடி மறைத்துக் கொள்ள கடந்த அரசுகளை குற்றம் சுமத்துவது வாடிக்கையாகியுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

ஊழல் மோசடிகளைத் தவிர்த்து வீண் விரயத்தை தவிர்த்து ஆட்சி செய்வதாக கூறும் அரசு, அந்தப் பணத்தைக் கொண்டு உப்பு, அரிசி, தேங்காய் போன்றவற்றின் விலைகளைக் குறைக்க முடியும் அல்லவா என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

விரைவில் மின்சாரக் கட்டணங்கள் உயர்வடையும் எனவும் அது மக்களின் அன்றாட வாழ்க்கையை மட்டுமன்றி ஒட்டுமொத்தகைத்தொழிற்துறையையும் பாதிக்கும் எனவும் விமல் வீரவன்ஷ தெரிவித்துள்ளார்.

2024 ஆம் ஆண்டில் இலாபமீட்டிய இலங்கை மின்சாரசபை ஏழு மாதங்களில் எவ்வாறு நஷ்டமடைந்தது என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.



# அகிலத்துக்குக் கிடைத்த பொக்கிஷம் விபுலானந்தர்!

## அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேவிக்ரம புகழாரம்

(வி.ரி.சகாதேவராஜா)

கல்வித் துறையில் மாத்திரமல்ல ஆன்மீகத் துறையிலும் துறைபோன ஒருவராக சுவாமி விபுலானந்தர் திகழ்ந்திருக்கின்றார் . அவர் அகிலத்துக்குக் கிடைத்த ஒரு பொக்கிஷம்.

இவ்வாறு அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேவிக்ரம காரைதீவில் உரையாற்றுகையில் புகழாரம் சூட்டினார்.

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இந்து சமய அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கான தேசிய ஆக்கத் திறன் விருது மாவட்ட மட்ட பரிசளிப்பு விழா காரைதீவு சுவாமி விபுலாநந்த ஞாபகார்த்த மணிமண்டபத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய.அநிருத்தனன் தலைமையில் இடம்பெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பேசியபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலகில் முதல் தமிழ்ப் பேராசிரியரான சுவாமி விபுலானந்தர் பல மொழிகளிலே பாண்டித்தியம் பெற்று பல துறைகளில் பாண்டித்தியம் பெற்ற ஒருவராக இருந்தார்.

மிக முக்கியமாக இசைத் துறையிலே அவர் ஆற்றிய சேவையும் இசை துறையில் அவர் உருவாக்கிய யாழ். நூலும் உலகப் பிரசித்தி பெற்றவை.

உண்மையாக சொல்லப் போனால் அவர் பிரதேசத்துக்கு மாத்திரம் இல்லாமல் பொதுவான ஒரு தேசிய உரிமையாக ஒரு தேசிய பொக்கிஷமாக கொண்டாடப்பட வேண்டிய ஒருவர்.

அவரது தந்தை ஒரு கிராம உத்தியோகத்தர். அரச சேவையாளர். அதே வேளை சுவாமிகள் தாய் நாட்டுக்காக இராணுவ வீரராகவும் சேவையாற்றி இருந்தார்.

அவர் இப் பூவுலகில் வாழ்ந்த 55 வருடத்தில் இந்து சமயத்துக்கும் தமிழுக்கும் மண்ணுக்கும் செய்த சேவை அளப்பரியது.

பௌதீக துறையில் பட்டதாரி அதேவேளை தமிழ்ப் பண்டிதர். கல்வித் துறையில் ஆன்மீக துறையில் துறை போன ஒரு பரமகுருவானவர். அவர் துறவி. அவரது ஆசீர்வாதம் அனைவருக்கும் கிடைக்கும்.

ஏனெனில், அவர் சாதிமத பிரதேசம் கடந்தவர் . அவர் ஒரு தேசிய உரிமையாக தேசிய பொக்கிஷமாக கொண்டாடப்பட வேண்டிய உன்னத புருஷராவார்.– என்றார். அவரது சிங்கள உரையை அம் பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் சிவ.ஜெகராஜன் தமிழில் மொழி பெயர்த்தார்.





# இறக்காமத்தில் சுற்றுலா நீதிமன்றம் ஸ்தாபிக்க வேண்டியது அவசியமானது!

## அஷ்ரப் தாஹிர் எம்.பி. வலியுறுத்து

(அபு அலா)

இறக்காமம் பிரதேச மக்களின் நீண்டநாள் எதிர்பார்ப்பாகக் கருதப்படும் நீதிமன்ற நடவடிக்களை இலகுபடுத்துவதற்கான கோரிக்கையை அடிப்படையாகக் கொண்டு, சுற்றுலா நீதிமன்றம் ஒன்றை இந்தப் பகுதியில் ஸ்தாபிக்க வேண்டும் என்று திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் வலியுறுத்தினார்.

இறக்காமம் பிரதேச செயலகத்தில் நேற்று (16) இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இறக்காமம் பிரதேச மக்கள் அம்பாறை நீதிமன்றத்திலேயே தற்போதைய வழக்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் இந்த மக்கள் மொழி மற்றும் பயணத்துக்காகச் சிரமங்களை எதிர்கொண்டு பல அசௌ கரியங்களுக்கு உட்பட்டு வருகின்றனர்.-என்றார்.

நீதிமன்ற நடவடிக்கைகள் எளிதாகக் கிடைக்கும் வகையில், குறைந்தபட்சம் ஒரு சுற்றுலா நீதிமன்றத்தை இறக்காமத்தில் ஸ்தாபிப்பது அல்லது அக்கரைப்பற்று நீதிமன்றத்துடனாவது இவர்களின் நீதிமன்ற நடவடிக்களை இணைக்க வேண்டியதன் அவசியம் பற்றியும் அவர் எடுத்துரைத்தார்.



இந்தக் கூட்டத்தில், அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச திணைக்களங்களின் தலைவர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.





# திருகோணமலை குச்சவெளியில் முள்ளிவாய்க்கால் நினைவு கஞ்சி

(ஹஸ்பர்)

திருகோணமலை குச்சவெளி வேலூரில் முள்ளிவாய்க்கால் நினைவு கஞ்சி வழங்கலும் மக்கள் சோகமும் நீதிக்கான எதிர்பார்ப்பும் ஒருங்கிணைந்த நிகழ்வாக இடம்பெற்றன.

முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தை முன்னிட்டு, கடந்த யுத்தத்தில் உயிரிழந்த மக்களை நினைவுகூரும் நிகழ்வுகள் நீடித்த வலியையும், அரசால் மறுக்கப்படும் நீதிக்கான மக்களின் போராட்டத்தையும் வெளிப்படுத்தும் முக்கியமான வலையொலியாக மாறியுள்ளன.

அந்த நிலையில், திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளி வேலூர் பகுதியில், மக்களின் பங்கேற்புடன் முள்ளிவாய்க்கால் நினைவு கஞ்சி வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வில், காணாமற்போனோரின் உறவுகள், கிராமப்புற மக்களும், சமூகச்செயற்பாட்டாளர்களும் கலந்து கொண்டு தங்கள் துயர அனுபவங்களைப் பகிர்ந்ததோடு, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வாழ்வுகளைப் பற்றி பேசினர். நிகழ்வு, சமூக நினைவாற்றலை பாதுகாத்து, இனநீக்கம், உயிரிழப்புமற்றும்அடக்குமுறைகளுக்கு எதிரான மக்களின் எதிர்வினையாகவும் அமைந்தது.

# அன்புவெளிபுர முன்பள்ளி மாணவருக்கு சேமிப்புப் புத்தகமும் பாடசாலைப் பையும்

(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை அன்பு வெளிபுரத்தில் உள்ள ஞான சேகரம் முன்பள்ளி மாணவர்களுக்கு வங்கி சேமிப்புப் புத்தகமும் பாடசாலை பையும் நேற்று (16) வழங்கி வைக்கப்பட்டன.

இதில் பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கதிரவேலு சண்முகம் குகதாசன் கலந்து கொண்டு வழங்கி வைத்தார்.

இதன் போது இலங்கை வங்கியின் உத்தியோகத்தர்கள், பெற்றோரும் கலந்து கொண்டனர்.

இதன்போது உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் ச.குகதாசன்,

ஜப்பான் நாட்டவர் தங்களது வருமானத்தில் 25 வீதத்தைச் சேமித்து வருகின்றனர். இதுபோன்று பிள்ளைகளின் பெயரில் சேமிக்க வேண்டும். எனது தந்தையின் பெயரில் அரசியல் செய்ய வேண்டும் என்ற நோக்கில் சேமித்த பணம் 50 லட்சத்தை தாண்டியுள்ளது. கல்விதான் சிறந்த மூலதனம்.



கல்வி என்பது அழியாத செல்வம். பிள்ளைகளின் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதுடன் கல்வியை பற்றி நாற்பது குறள்களில் வள்ளுவர் கூறியுள்ளார். எனவே எதிர்காலத்திலும் கல்விக்காக என்னாலான முன்னெடுப்புக்களை எடுத்துச் செல்வேன்.– என்றார்.







# சந்நிதியான் ஆச்சிரமத்தில் வாராந்த உதவி!

சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டு பேரவையின் ஏற்பாட்டில், ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் இடம்பெற்ற வாராந்த நிகழ்வில், ஜெயக்குமார் டிலோஜினி, யோகராசா றொபின்சிகா அவர்களின் பாடல்கள் இடம்பெற்றன.

கீபோட் – இசைக்கலாமணி நடேசு செல்வச்சந்திரன், மிருதங்கம் – கலா வித்தகர் க. சிவகுமார், தபேலா – வித்துவான் ஆ. பிரபா.

உதவித் திட்டங்களாக, உடுத்துறை மகா வித்தியாலயத்தின் கோரிக்கைக்கு அமைவாக, 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான நிழற்பிரதி இயந்திரம் வழங்கப்பட்டது.

04 மாணவர்களுக்கு ஒரு லட்சத்து 72 ஆயிரம் ரூபா பெறுமதியான சைக்கிளள்கள் வழங்கப்பட்டன.

மந்துவில் வடக்கு, கொடிகாமத்தை சேர்ந்த மாணவி, மட்டுவில் வடக்கு, சாவகச்சேரியை சேர்ந்த மாணவி, ராஜா பிளாசா, புன்னாலைக்கட்டுவன் வடக்கை சேர்ந்த மாணவி, உடுவில் தெற்கு, சுன்னகத்தை சேர்ந்த மாணவன் ஆகியோருக்குச் சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

ஸ்ராலின் வீதி, யாழ்ப்பாணத்தை சேர்ந்த குடும்பத்துக்கு மருத்துவ கொடுப்பனவாக 10 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது0 மாதாந்தம் 06 மாதங்களுக்கு இந்த நிதி வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. பதுளை சிறுவர் இல்லத்தைசேர்ந்த, மல்கலைக்கழகத்துக்குத் தெரிவான மாணவிக்கு மடிக்கணினி ஒன்று வழங் கப்பட்டது.

நேற்று வெள்ளிக்கிழமை இந்த நிகழ்வு இடம்பெற்றது.



# மு.காவுடன் கூட்டுச் சேர்ந்து ஆட்சி அமைக்கும் முடிவை பரிசீலிக்குக!

## அதாவுல்லாவிடம் கோருகிறார் யஹியாகான்

**(நூருல் ஹுதா உமர்)**

அக்கரைப்பற்று மக்களின் தீர்ப்பை தேசிய காங்கிரஸ் தலைவர் ஏற்க வேண்டும். மு.காவை அந்த மக்கள் முற்றாக நிராகரித்துள்ளனர். அட்டாளைச்சேனை பிரதேச சபை விடயத்தில் அதாவுல்லா தவறான முடிவுகளை எடுக்கக் கூடாது என்று ஐக்கிய மக்கள் காங்கிரஸ் செயலாளர் நாயகம் ஏ.சி. யஹியாகான் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அக்கரைப்பற்று மக்களின் நம்பிக்கையை அதாவுல்லா பாதுகாக்க வேண்டும். அங்கு அதிகாரத்தை பெற்று அட்டாளைச்சேனையில் முகாவுடன் கூட்டுச் சேர்வது ஆரோக்கியமற்றது.



மட்டுமன்றி அட்டாளைச்சேனை பிரதேச சபையில் மு.காவுடன் இணைந்து ஆட்சியமைப்பது என்பது அதாவுல்லாவைப் படு குழியில் வீழ்த் தும்.

அக்கரைப்பற்று மக்களின் தீர்மானத்தை அதாவுல்லா புறந்தள்ளக் கூடாது. முஸ்லிம் காங்கிரஸின் பசப்பு வார்த்தைகளை நம்பி அதாவுல்லா செயற்படுவாராக இருந்தால் இனி வரும் தேர்தல்களில் தேசிய காங்கிரஸ் மண் கவ்வும் என்பதை உறுதியாக கூறி வைக்க விரும்புகிறேன்.

மக்களின் தீர்மானத்தை மதித்து முகாவுடன் கூட்டுச் சேர்ந்து ஆட்சியமைக்க முயலும் முடிவை அதாவுல்லா மறு பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும்.– என்றார்.

# பரீட்சைகள் ஆணையாளர் நாயகமாக முதலாவது பெண்மணி இந்திக குமாரி



(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)

இலங்கையின் வரலாற்றில் முதல் பெண் பரீட்சைகள் ஆணையாளர் நாயகமாக ஏ.கே.எஸ்.இந்திக குமாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் வியாழக்கிழமை (15) தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.









# பாகிஸ்தானுடனான மோதல் குறித்து உலக நாடுகளுக்கு விளக்கமளிக்க குழு

## கனிமொழி, சசி தரூருக்கு முக்கிய பொறுப்பு

இந்தியா – பாகிஸ்தான் இடையிலான மோதல் குறித்து முக்கிய வெளிநாட்டு அரசாங்கங்களுக்கு விளக்கமளிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள குழுவில் தி.மு.கவின் எம்.பி. கனிமொழி, காங்கிரஸ் எம்.பி சசி தரூர் உட்பட 7 பேர் இடம் பெற்றுள்ளனர்.

சமீபத்திய இந்தியா – பாகிஸ்தான் மோதல் மற்றும் அது குறித்த இந்தியாவின் நிலைப்பாடு குறித்து முக்கிய வெளிநாட்டு அரசாங்கங்களுக்கு விளக்கமளிக்கும் பணியில் ஈடுபடவுள்ள அனைத்துக் கட்சி பிரதிநிதிகளின் குழுவிற்கு தலைமை தாங்கும் ஏழு எம்.பிக்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் காங்கிரஸ் எம்.பி சசி தரூர், தி.மு.க. எம்.பி கனிமொழி, என்.சி.பி. எம்.பி சுப்ரியா சுலே ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

ஏப்ரல் 22 பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதல் மற்றும் இந்தியாவின் பதிலடி தாக்குதலான ஒபரேஷன் சிந்தூர் ஆகியவற்றைத் தொடர்ந்து, இந்தியாவின் இராஜதந்திர நடவடிக்கைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவர்களின் பெயர்களை நாடாளுமன்ற விவகார அமைச்சகம் அறிவித்துள்ளது.

இது குறித்த அறிவிப்பைப் பகிர்ந்து கொண்ட நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு,

“மிக முக்கியமான தருணங்களில், பாரதம் ஒற்றுமையாக உள்ளது. பயங்கரவாதத்திற்கு எதிரான பூஜ்ஜிய சகிப்புத் தன்மை என்ற எங்கள் பகிரப்பட்ட செய்தியை எடுத்துச் செல்லும் ஏழு அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் விரைவில் முக்கிய கூட்டாளி நாடுகளுக்குச் செல்வார்கள். வேறுபாடுகளுக்கு அப்பால், இது அரசியலுக்கு அப்பாற்பட்ட தேசிய ஒற்றுமையின் சக்திவாய்ந்த பிரதிபலிப்பு” என்று அவர் தெரிவித்துள்ளார்.

சசி தரூருடன், பிரதிநிதிகளை வழி நடத்தும் மற்ற எம்.பி.க்கள் விவரம்:

ரவி சங்கர் பிரசாத் (பா.ஜ.க), சஞ்சய் குமார் ஜா (ஜே.டி.யு), பைஜயந்த் பாண்டா (பா.ஜ.க), கனிமொழி கருணாநிதி (தி.மு.க), சுப்ரியா சுலே (என்.சி.பி), ஸ்ரீகாந்த் ஏக்நாத் ஷிண்டே (சிவசேனா) ஆகியோர் தலைமையிலான ஒவ்வொரு குழுவிலும் 5 – 6 எம்.பி.க்கள் இருப்பார்கள் என்றும் அமெரிக்கா, இங்கிலாந்து, தென்னாப்பிரிக்கா, கட்டார் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் போன்ற நாடுகளுக்கு இவர்கள் பயணம் செய்வார்கள் என்றும் மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இந்த வெளிநாட்டு சுற்றுப்பயணம் மே 22 இற்குப் பிறகு தொடங்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

எல்லை தாண்டிய பயங்கரவாதத்தில் பாகிஸ்தானின் பங்கை வெளிச்சம் போட்டு காட்டவும், தீவிரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டிற்கு சர்வதேச ஆதரவை ஒருங்கிணைக்கவும் மத்திய அரசு இந்த இராஜதந்திர தாக்குதலைத் தொடங்கியுள்ளது.

# அண்ணா பல்கலைக்கழகத்துக்கு 17 ஆவது வெடிகுண்டு மிரட்டல்




கிண்டியில் உள்ள அண்ணா பல்கலைக்கழகத்துக்கு 17 ஆவது முறையாக வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

சென்னை கிண்டியில் உள்ள அண்ணா பல்கலைக்கழக பதிவாளர் மின்னஞ்சல் முகவரிக்கு நேற்று முன்தினம் இரவு மின்னஞ்சல் ஒன்று வந்தது. அதில், அண்ணா பல்கலைக்கழக வளாகத்திலும், அந்த வளாகத்தில் உள்ள கிண்டி பொறியியல் கல்லூரியிலும் அதிக திறன் கொண்ட வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளது. அது வெள்ளிக்கிழமை வெடிக்கும் என குறிப்பிடப்பட்டிருந்தது.

இதைக் கண்டு அதிர்ச்சி அடைந்த பதிவாளர் அலுவலக ஊழியர்கள், இது தொடர்பாக கோட்டூர்புரம் பொலிஸாருக்கு தகவல் தெரிவித்தனர். இதையடுத்து பொலிஸார் வெடிகுண்டுகளை கண்டறிந்து அகற்றும் நிபுணர்கள் மற்றும் மோப்ப நாய் உடன் விரைந்து வந்து சோதனை நடத்தினர். அப்போது எந்த வெடிப் பொருளும் கண்டெடுக்கப்படவில்லை. இதையடுத்து, வதந்தியை பரப்பும் நோக்கத்துடன் மிரட்டல் மின்னஞ்சல் அனுப்பப்பட்டது தெரியவந்தது. அண்ணா பல்கலைக்கழகத்துக்கு கடந்த ஒரு வருடத்தில் மட்டும் 17 முறை வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் வந்தால் தகுந்த பதிலடியை கொடுக்கப்படும்

## பாகிஸ்தான் பிரதமர் ஷபாஸ் ஷெரீப் எச்சரிக்கை





பாகிஸ்தானின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் வந்தால் தகுந்த பதிலடி கொடுக்கும் உரிமை நாட்டிற்கு உண்டு என பாகிஸ்தான் பிரதமர் ஷபாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார்.

பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடியாக, இந்தியா ஒபரேஷன் சிந்தூர் தாக்குதலை தொடுத்தது.

இதையடுத்து பாகிஸ்தான் அத்துமீறி தாக்குதல் நடத்தியதால், இரு நாடுகளுக்கம் இடையே நான்கு நாள்கள் இராணுவ தாக்குதல் நீடித்தது.

பின்னர், பேச்சுவார்த்தை மூலம் இராணுவ நடவடிக்கைகள் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

இந்த நிலையில் பாகிஸ்தானில் இராணுவ வீரர்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சி ஒன்று நடத்தப்பட்ட நிலையில், நாடு முழுவதும் பேரணிகளும் நடத்தப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த பாகிஸ்தான் பிரதமர், ”பாகிஸ்தான் ஒரு அமைதியான நாடு ஆனால் அதன் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் வந்தால் தகுந்த பதிலடி கொடுக்கும் உரிமை அதற்கு உள்ளது” என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், கருத்து தெரிவித்த பாகிஸ்தான் வெளியுறவு செய்தித் தொடர்பாளர் ”சண்டை நிறுத்தத்தை இந்தியா உண்மையாக கடைப்பிடிக்க வேண்டும்.

இந்தியா விரோதப்போக்கை மீண்டும் தொடங்கினால் நாங்கள் பதிலடி கொடுப்பதைத் தவிர வேறு வழியில்லை.” என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# டொனால்ட் ட்ரம்ப்புக்கு கொலை மிரட்டல்



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்புக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது தொடர்பில், முன்னாள் எப்.பி.ஐ. இயக்குநர் ஜேம்ஸ் கோமியிடம் அமெரிக்க பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 2013 ஆம் ஆண்டு ஒபாமா ஆட்சியின் போது, எப்.பி.ஐ (FBI) இயக்குநராக ஜேம்ஸ் கோமி நியமிக்கப்பட்டார்.

அதன்பிறகு, 2017ஆம் ஆண்டு புதிய ஜனாதிபதியாக ட்ரம்ப் முதல் முறையாக தேர்வு செய்யப்பட்ட போது, கேமி அந்தப் பொறுப்பில் இருந்து நீக்கப்பட்டார்.

இந்தநிலையில், கடற்கரையில் கடல் ஓடுகளை வைத்து “8647” என்ற வடிவத்தில் வைத்து பதிவு ஒன்றை கோமி பதிவிட்டுள்ளார்.

இதில், 86 என்பது கொலை செய்ய வேண்டும் என்று அர்த்தம்படுவதாகவும், 47 என்பது அமெரிக்காவின் 47 ஆவது ஜனாதிபதி என்பதை குறிப்பிடுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இது பெரும் சர்ச்சையான நிலையில், அந்தப் பதிவை ஜேம்ஸ் கோமி நீக்கி விட்டார்.

இந்தநிலையில், எந்த உள்நோக்கத்திலும் அந்தப் பதிவை போடவில்லை என்றும், பயங்கரவாதத்திற்கு எதிரானவன் என்றும் விளக்கம் அளித்திருந்தார்.


கோமியின் இந்தப் பதிவுக்கு கடும் கண்டனம் தெரிவித்த உள்நாட்டு பாதுகாப்புத்துறை அமைச்சர் கிரிஸ்டி நோம், இது தொடர்பாக உரிய விசாரணை நடத்தப்படும் என்று தெரிவித்துள்ளார்.

பக்கங்கள் 03

கனடா முரசு

சனிக்கிழமை 17/05/2025

## இளம்பெண் ஆயுதமேந்திய சந்தேக நபர்களால் கடத்தல்



கனடாவில் ஜாஸ்மின் அயர்ன் (வயது 24) என்ற இளம் பெண் ஆயுதமேந்திய சந்தேக நபர்களால் கடத்தப்பட்டு இருக்கலாம் என்று

02

## கனடா - அமெரிக்க இந்தியக் குடும்பம் பலி:

# குற்றவாளிகளுக்கு கடும் சிறைத்தண்டனை வழங்குமாறு சட்டத்தரணிகள் கோரிக்கை








கனடா அமெரிக்க எல்லையில் இந்தியக் குடும்பம் ஒன்று பனியில் உறைந்து பலியான வழக்கில் குற்றவாளிகளுக்கு முறையே 19 மற்றும் 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை கோரியுள்ளனர் சட்டத்தரணிகள்.

2022ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19ஆம் திகதி, குஜராத்திலுள்ள Dingucha என்ற கிராமத்தைச் சேர்ந்த, ஜகதீஷ் பட்டேல் ( வயது 39), அவரது மனைவி மற்றும் பிள்ளைகள் அமெரிக்காவுக்குள் நுழையும் முயற்சியின்போது, கனடா அமெரிக்க எல்லையில் பனியில் உறைந்து பரிதாபமாக பலியான சம்பவம் நினைவிருக்கலாம்.

02





# ஸ்கார்பரோவில் துப்பாக்கிச் சூடு 19 வயது இளைஞர் படுகாயம்

டொரொண்டோவில் உள்ள ஸ்கார்பரோ பகுதியில் வெள்ளிக்கிழமை அதிகாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் காயமடைந்து மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார் என டொரொண்டோ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் லாரன்ஸ் அவென்யூ ஈஸ்ட் மற்றும் ஓர்டன் பார்க் சாலை அருகே இரவு 12:52 மணியளவில் நடைபெற்றது.

19 வயதுடைய ஒரு இளைஞர் துப்பாக்கியால் சுடப்பட்ட நிலையில் கிடந்தார் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

காயமடைந்தவருக்கு உயிராபத்து இல்லை எனவும், காயமடைந்தவர் மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளார் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களை குறித்து இதுவரை எந்தத் தகவலும் வெளியிடப்படவில்லை.

பொலிஸார் இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.



# வெளிநாட்டு தொழிலாளர்கள் நாடுகடத்தப்படும் அபாயம் நிலை

கனடாவில் வெளிநாட்டு தொழிலாளர்கள் நாடுகடத்தப்படும் அபாயத்தில் உள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கனடாவின் தற்காலிக வெளிநாட்டு தொழிலாளர் திட்டத்தில் ஏற்பட்ட கடுமையான மாற்றங்களால் இந்நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மாசு கட்டுப்பாட்டு உபகரணங்களை தயாரிக்கும் கனடாவைச் சேர்ந்த நிறுவனம் ஒன்று, தங்கள் நிறுவனத்தில் பணியாற்றும் ஏழு வெளிநாட்டு தொழிலாளர்களின் வேலை அனுமதிகள் விரைவில் காலாவதியாக உள்ளதால், ஒட்டாவா அரசிடம் புதிய விதிமுறைகளை மறுபரிசீலனை செய்ய கோரிக்கை வைத்துள்ளது.

இந்தநிலையில், 2024 நவம்பர் மாதம் நடைமுறைக்கு வந்த புதிய விதிகள், தற்காலிக தொழிலாளர் வேலை அனுமதிகளைப் பெற மிகவும் கடினமாக்கி விட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக உயர் சம்பள வேலை வாய்ப்புகளுக்கான சம்பள அளவுகோல்கள், சராசரி ஊதியத்தைவிட 20 வீதம் அதிகமாக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இது மாகாணம் அல்லது பிரதேசத்தைப் பொறுத்து மணிக்கு ஐந்து டொலர் முதல் எட்டு டொலர் வரை அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்தோடு, 2024 செப்டம்பர் 26 முதல், ஒரு நிறுவனத்தில் தற்காலிக வெளிநாட்டு தொழிலாளர் திட்டம் வாயிலாக பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை, மொத்த ஊழியர்களில் பத்து சதவீதத்திற்கும் மேல் இருக்கக் கூடாது என கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

இந்த மாற்றங்கள் சுமார் 34,000 வேலை வாய்ப்புகளை உயர் ஊதியப் பிரிவிலிருந்து குறைந்த ஊதியப் பிரிவுக்கு மாற்றக்கூடும் எனக் கணிக்கப்படுகிறது.

இதனால் நிறுவனங்கள் கூடுதல் சம்பளம் வழங்க முடியாமல், தங்களின் திறமையான ஊழியர்களை இழக்கும் அபாயம் உருவாகியுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த புதிய விதிகள், கனடாவை வேலைவாய்ப்புக்கான பிரபலமான நாடாக இருக்க தடையாக அமைந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## குற்றவாளிகளுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அந்த வழக்கு தொடர்பாக ப்ளோரிடாவைச் சேர்ந்த Steve Shand மற்றும் ப்ளோரிடாவில் வாழும் இந்தியரான Harshkumar Ramanlal Patel ஆகிய இருவர் மீதும் குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அந்நியர்களை அமெரிக்காவுக்குள் கடத்தும் முயற்சியில் அவர்களுக்கு காயம் ஏற்படுத்தியது, உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தியது, தனிப்பட்ட முறையிலான பண மற்றும் பிற ஆதாயங்களுக்காக அவர்களைக் கடத்த உதவியது முதலான குற்றச்சாட்டுகள் அவர்கள் மீது பதிவுசெய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில், Harshkumar Ramanlal Patel தனது தவறுக்காக எள்ளளவும் வருந்தவில்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

Steve Shand உடன் இணைந்து கடத்தல் குற்றத்தில் ஈடுபட்டது தானில்லை என்றே அவர் கூறிவருவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

Patelக்கு 19 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கவேண்டும் என்றும், அவருடன் கூட்டுச் சதியில் ஈடுபட்ட Steveக்கு 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கவேண்டும் என்றும் சட்டத்தரணிகள் கோரியுள்ளனர்.

## இளம்பெண்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவிக்கப்படுகிறது.

ஆயுதமேந்திய ஒருவருடன் இருப்பதாக நம்பப்படும் ஜாஸ்மின் அயர்னை கனடாவின் Loon Lake RCMP அதிகாரிகள் தீவிரமாக தேடி வருகின்றனர். மேலும் பொதுமக்கள் விழிப்புடன் இருக்குமாறு அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

மே 15 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 11:00 மணியளவில் ஐலண்ட் லேக் ஃபர்ஸ்ட் நேஷன் பகுதியில் இருந்து மேற்படி பெண் காணாமல் போயுள்ளார் என புகாரளிக்கப்பட்டது.

அத்துடன் அவர் விருப்பத்திற்கு மாறாக தடுத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்றும் கவலைகள் எழுப்பப்பட்டன.

இந்த தீவிரமான சூழ்நிலையை தொடர்ந்து, சஸ்காட்செவன் RCMP மே 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10:27 மணியளவில் மாகாண அளவிலான அவசர எச்சரிக்கை ஒன்றை வெளியிட்டது.

அதில், ஜாஸ்மின் அயர்னை கடத்தியிருக்கலாம் என நம்பப்படும் ஆயுதமேந்திய ஆபத்தான நபர் குறித்து பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர் 24 வயதுடைய மைக்கேல் பூவியர் என அதிகாரிகள் அடையாளம் கண்டுள்ளனர்.

அவர் கடைசியாக மே 15 ஆம் திகதி இரவு 11:00 மணியளவில் ஐலண்ட் லேக் ஃபர்ஸ்ட் நேஷனில் காணப்பட்டார். அவர் ஐந்து அடி ஆறு அங்குல உயரம், 215 பவுண்டுகள் எடை, பழுப்பு நிற கண்கள் மற்றும் கருப்பு முடி கொண்டவர் என்று தெரிவிக்கப்படுகிறது.



# காட்டுத்தீ காரணமாக கனடாவில் எச்சரிக்கை

கனடாவின் அலெக்ஸாண்டர் என்ற கிராமப் பகுதிக்குள் தற்போதைக்கு வர வேண்டாம் என எச்சரிக்க விடுக்கப்பட்டுள்ளது.

காட்டுத்தீ பரவுகை காரணமாக கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள அலெக்ஸான்டர் என்ற கிராமப்புற மாநகராட்சியின் மேயர் ஜாக் பிரிஸ்கோ இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

எதிர்வரும் நீண்ட விடுமுறைக் காலத்தில் அந்தப் பகுதிக்கு மக்கள் வருவதைத் தவிர்க்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

இங்கு பெரும்பாலான பகுதிகள் பருவகால குடில்களால் நிரம்பியுள்ளன. உங்கள் குடில்களின் நிலைமை எப்படி இருக்கிறது என்பதை பார்க்க வர வேண்டாம். அது பாதுகாப்பான நேரம் வரும்வரை காத்திருக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

மோசமடைந்த இந்த தீயை கட்டுப்படுத்த எளிதாக இருக்க வேண்டுமெனில், அதிகமான மக்கள் இப்பகுதியில் இருக்கக்கூடாது என தெரிவித்துள்ளார்.

இந்த பகுதியில் தற்போது மூன்று பெரிய காட்டுத்தீக்கள் எரிகின்றன என்றும், 100 இற்கும் மேற்பட்ட தீயணைப்புத்துறையினர் கடமையில் அமர்த்தப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்தார்.

மாகாண அரசு மற்றும் உள்ளூர் அதிகாரிகள் இணைந்து தீயை கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.